Subscription.
Inland ; Rs. 100/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
Established : 1841 : A Christian Weekly: Published Every Friday
Vol:- 150 Jaffna, Friday 06 April 1990 No:-14
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in
Tamil and English
Please send them to
THE EDITOR,
'The Morning Star'
182, First Cross Street,
JAFFNA.

## Farewell to Principal Kadirgamar.

An addendum to the previous issues account includes some of the events in the farewell meeting which were inadvertently missed. The meeting was preceeded by a procession from the entrance to the College where Mr. & Mrs. Kadirgamar were garlanded and led by the College band. A fellowship tea took place in the Ottley Hall.

At the meeting proper after the felicitatory speeches, the traditional gold medal presented to jubilarians who retire was pinned to the coat of the retiring principal by the President of the Association Mr. A. Rajasingham and an additional presentaion too was made.

Mr. Kadirgamar in his response to the speeches and presents thanked the alumni for the function and presents and for their presence in such large numbers even though the week and day were really not conducive for a public meeting of that nature. Mr. Kadirgamar referred with much satisfaction and pleasure to the very energetic alumni associations now functioning in various parts of the world, specially in Canada, U.S.A., Australia and also in informal ways in Malaysia and Singapore. He had personal knowledge of all these associations by visits except the ones in Australia.

Mr. Kadirgamar also paid a tribute to his own father for having chosen Jaffna College to further his education. Even though his father was a product of a well known Christian public school, he deliberately chose Jaffna College for all his children for the firm Christian ideals of the College, its liberal traditions in education, its very committed and excellent staff and for the rich heritage the family had in the American Ceylon Mission. He also referred with gratitude to the Board of Directors of the College and Principal Selliah and his staff for the extra care and nurture given to all students who came to Jaffna College immediately after the second World War from Malaysia in 1946. Finally he thanked the alumni, Vaddukoddai commuity, Diocese, staff and specially the student community for standing by him so loyally during the traumatic and damaging take over of the college in 1974 and through the dark days that followed by military and violent actions by so many different forces. It was God's grace alone that "brought us home" safely he said.

## WILLIAM MATHER MEMORIAL WOMEN'S CENTRE
### MARUTHANAMADAM
### Anual Festival

The anniversary of the Women's Centre was celebrated on Saturday the 10th of March, 1990. The centre which had a set back owing to the deplorable conditions in Jaffna in 1987 and there after was again revived to its present state by the untiring efforts of the Board of Managements and Sub Committies. We thank KNH, NORAD and friends here and abroad for the willing and voluntary help provided to the centre. This is an occation to raise thanks to God for his great mercies.

The Centre grounds turned festive for the occation. Programme for the day started with the Praise Service conducted by Chundikuli Girls' College There was a large crowd present. The beautiful singing and a moving mesesag by Miss. Thiyagarajah which brought out the importance of worshiping and thanking God from the heart as against outward formalities. Christ's words in St. John says "True worshippers shall worship the father in sprit and in truth." set the atmosphere for the day. The leader Miss. Sriranganathan led the group with short inspiring messages and prayers assisted by members of the college SCM. It came to a close with a prayer and benediction by Rev. Bennet Balasingh. The Service had a great appeal and was well appriciated.

The President, Mrs. Somasundaram, heartily thanked Chundikuli Girls' College for their participation in their programme and thanked all the visitors and said that the Centre is always available for camps, seminars, SCM meetings and retreats. Next the Centre Girls entertained the visitors by singing two songs ably trained by Miss. P. Kathirgamar. Special pr z s were distributed to the girls by Mrs. Jeyaweerasingam, principal of Chundikuli Girls college.

At 11a m. the sale and exhibition was opend by Rev. Bennet Balasingh. Soon the Centre was a hive of activities with the sale of articles made by the Centre and contributions from Ladies Guilds of the Churches in Jaffna. A great rush was made to the different sections. All were eager to purchase the items as the Centre has always maintained its high quality. Items vanished in a short time.

At the end of the sale, sharp to time, all were served with sumptous lunch at Arulagam, which was neatly set and arranged. The serving was quick and orderly. There was a lot of satisfaction on every body's face. The Centre comprises of 66 girls from Arulagam and 34 from Women's Centre. The credit goes to the inmates and staff of the Centre who had heiped in carrying out the day's programme.

The Board of Management had their Annual meeting after lunch.

## Indian Children perform Best.

Children from Indian families do far better than their British Classmates; according to a new analysis of academic performance of ethnic groups.

The study by the Inner London Education Authority shows that the two groups faring worst in its schools are pupils from Caribbean homes and those with English, Welsh and Scottish parents.

While Bangladeshi and Turkish Children come bottom of the exam table, ILEA says once account is taken of social factors they are not the worst performers. Indian families put pressure on their children too succeed and teachers had high expectation of them.

The groups with the highest propotion of children getting five good O - levels in 1987 were from Indian and European (other than British) backgrounds, followed by Pakistani, Chinese, Vietnamese and Hong Kong families. The best exam results are achived in Roman Catholic Schools and in all ethnic groups, girls outperform boys.

N.B. This Survey applies only to London Schools.

- from the Independent

## Notice

**The Diocesan Office will be closed from the 9th April to the 14th April in view of the Holy Week.**

Treasurer
J. D. C. S. I
Vaddukoddai

## BIRTH CENTENARY

**Cherished memories**
**of**
**Rev. Stephen M. Visvalingam**

*03. 04. 1890 — 12. 04. 1952*
and

Mary Thiraviam
*27. 09. 1897 — 11. 10. 1980.*

*Thine for ever ! Oh how blest*
*They who find in Thee their rest.*

Remembered
with love and gratitude.

"Chrislyne" Kurunegala. "VISVASAM" Chavakacheri.

Rev. Stephen Murugapah Visvalingam was born at chavakacheri on April 3rd 1890. He studied first at chavakacheri and then at St. Johns College Jaffna and became a teacher there later on.

He passed the Dip. in Th. from he Divinity school of Nichol-sons. College at Cottayam S. India in Dec. 1913. He married Mary Thiraviam of Urumpirai and left for Singapore in 1916. He was ordained a Deacon in Jan 1917 and a Priest in Sept. 1919 in Singapore. He served in Singapore and then moved on to several parishes in Malaya and returned as Vicar of St. Mary's church Kuala Lumpur, after about twenty years of service in Malaya.

He returned to "Visvasam" Chavakacheri to spend his retirement. He helped in, the work of the outlying Parishes of Pallai, Mirrusuvil, klaly, and took to farming and gardening as a hobby. He passed away on Good Friday April 12th 1952.

His youngest son Andrew was a teacher at Drieberg College and is now a Chiartered Engineer in Malaysia. Their only daughter is with her daughter in Perth . Another son is at Mt-Lavinia and the other is a Doctor in Kurunagala, whose two sons served at Green Memorial Hospital Manipay.

## JAFFNA CHRISTIAN UNION

The Annual General Meeting of the Jaffna Christian Union will be held on Saturday the 21st of April 1990 at the Jaffna Y. M. C. A. at 9 .00 a .m.

All are cordially invited.

Rev. Christo T. Roberts
Secretary
J. C. U.

Book Review

## HOLY MAN IN A HEATHEN LAND

- By Anthony Howard -

**MICHAEL** Ramsey, who died just under two years ago, was the 100th Archbishop of Canterbury. But that is by no means his sole claim to distinction. He will probably turn out to have been the last genuine scholar - he had been a professor of divinity at both Durham and Cambridge - to occupy the chair of St. Augustine and for better or for worse, he also transformed he nature of the Church of England. When he took over at Canterbury in 1961, the C of E was still an adjunct of the Establishment, by the time he retired in 1974, it had certainly ceased to be that.

A diffident, otherworldly academic, Ramsey was in many ways an improbable agent of such an abrupt transition. When he was originally nominated to the Bishopric of Durham in 1952, He was to be observed wandering round the streets of Cambridge muttering o himself: "Hell, hell! Why what's the matter? The Lord works in mysterious ways. I am to be Bishop of Durham." That is just one the many revealing vignettes in Dr. Owen Chadwick's splendidly unstately portrait of a highly unorthodox Prince of the Church.

Despite having talked to his subject for some years before his death. Dr. Chadwick admits that what most people will remember about Ramsey are his extraordinary mannerisms; even in church he would give way to "convulsive fidgets" and often whistle while walking in procession. But such eccentricities are not always easily communicable on paper. They lend themselves more readily to the aural medium: one of the treasures of Broadcasting House used to be a three - minute tape of Ramsey's voice, consisting entirely of verbal hesitations with not a single word actually uttered.

It is little wonder that he often drove his brisker, more businesslike episcopal colleagues to despair (a typical occasion was one on which he delivered an oPen-air sermon to a World Scout Jamboree, reading learnedly from wrtten notes, which then blew about in the wind). But Ramsey's innate goodness always shone through: even a largely unchurched nation came to recognise that in its Arehbishop it possessed a truly Holy man.

In that sense, Ramsey was exactly what the Church needed during what was bound to be a period of transition. The 99th Archbishop of Canterbury, Dr. Geoffery Fisher, had been a classic prelate in the old tradition; he ran the *Eeclesia Anglicana* rather as if it was some vast public school (singular only in the good fortune of having its board of governors in the ky).

Fisher himself had been headmaster of Repton when Ramsey was a boy there, and his final school report on the pupil who was to be his successor tells a good deal of the contrast in their respective styles. To Fisher, Ramsey at 18 was a boy "who, in spite of certain uncouthnesses, has done good service on his own linea". That last phrase suggsasts some lack of team spirit- and it does not come wholly as a shock to discover that 40 years later the exheadmaster did his best to block his former pupil's accession to his job.

The Prime Minister, Harold Macmillan, however, would have none of that - and, having been propelled through the sees of Durham and York in record time, Ramsey found himself installed at Canterbury in 1961. It was only a year after Macmillan himself had spoken n South Africa of "the wind of change" - and it was always ikely that at some stage it would blow through the C of E too. By the 1960s it had arleady embarked on the controversial modernisation of its liturgy but, in terms even of nternal reform, it had done very little else. All the new pressures of adjusting to a changing climate thus fell on Ramsey's shoulders. Fortunstely, they turned out to be broad ones.

Although he was often ubjected to obloquy from the Right over his handling of such secular questions as the death Penalty, homosexual law reform and Commonwealth immigration (here he ran into trouble with the Labour government too), the new Archbishop can be seen today to have saved the Church in the nick of time: his various independent initiatives effectively removed the old taint of its being simply "the Tory Party at prayer". Only once perhaps, as Chadwick delicately indicates, did he blunder badly; and that was when, by the use of some injudicious language, he seemed to be giving the Church's blessing to the use of force against Ian Smith's Rhodesia. That year, 1965, a banner appeared at the Cenotaph announcing "Ramsey: Warmonger and Traitor", and the High Altar at Canterbury Cathedral was sprayed with the word "Peace"

It was a typically naive error - if only because, though the Archbishop himself apparently did not know it, the Wilson Cabinet had already resolved against taking any military action against the Smith regime. Ramsey hated [illegible] minding [illegible] dead by a formerly courteous Conservative peer in the House of Lords. It was odd that this should have upset him, for his own roots belonged firmly to Asquithian Liberalism: nor was an ideological inheritance that he ever tried to shake off. It is possible, indeed, that it provided the explanation for his other injudicious remark, which caused great offence to section of his own flock, that he confidently expected to meet some atheists in Heaven.

In his much more chatty book Mr. Michael De - la - Noy, a former press officer to Ramsey, claims that, that statement delivered in 1961, was directly attributable to his subject's distress at the premature death of a non - believing elder brother in 1930. It may, of course have been so - but De - la - Noy is seldom at his most convincing as an amateur psychoanalys He is particularly harsh on Ramsey's neglect of his own blood relatives (he had two sisters in addition to the brother who died). But if he did little more than send his nephews and nieces £ 1 book tokens at Christmas, was it really because his own marriage was childless? Somehow that seems altogether too glib an explanation - and De - la - Noy's other judgement tend to be equally facile. Too often he gives the impression of having listened (over - sympathetically) to the complaints of the Archdeacon Grantlys of the C of E - to whose worldly concerns Ramsey himself always displayed a complete indifference.

Was he a great Archbishop? Given his total lack of talent for administration, that is probably to claim too much - and Ramsey, who had a knowledge of his own deficiencies, and went to his grave mourning his failure to re - unite the Anglican and Methodist Churches, would never have claimed such a title for himself. But, as Dr. Chadwick' admirable biography makes clear, he was a simple and saintly man. He may not quite have been Pope John XXIII, with whom his reign concided for two years; but, from the narrower historical [illegible] of Auglicanism- he was the next best thing.

## LEAD KINDLY LIGHT

This year marks the centenary of the death of John Henry Newman, one of the most eminent of all the great Victorians. He is being remembered far and wide: in his two cities, Birmingham and Oxford; his two colleges, Oriel and Trinity; his two churches, the Church of England and the Roman Catholic Church; and in a varicty of lesser institutions with which he was assoeiated, usually by having started them. He seems by now to belong to everyone, and the National Portrait Gallery has this week paid its own tribute by opening an exhibition in his honour.

There is already a whole nternatonal industry in Newman docteral theses, no doubt partly explained by the sheer pleasure of exploring his angelic prose. Seldom has the English language been deployed so lucidly to such rigorous intellectual purpose.

A sebtle difference axists between an artificial anniversary and a real one. The artificial variety is dreamt up to promote contemporary causes. A real anniversary, in which category

(to be continued)

(continued from last issue)

## ASIA ALLIANCE..........

2. Re-establishment of YMCAs in Vietnam. Action is already being taken by some Movements.
3. The present difficult context of YMCAs in Burma. There is good formal relationships established, yet, we were not able to liberally support the work.
4. The Pakistan Movement had some difficulties and this is being resolved.
5. The political situation in some of the countries, e.g. Phillipines and Sri Lanka.

The national Movements while being concerned had decided to help where possible and share their resources to assist each other.

In 1991. the Asia Alliance Leaders Conference will be held in Bangkok. Far reaching decisions will be taken. The Alliance being the biggest and most active in the World Movement, decided that sub-regions should be formed. The South Asia region was formed earlier composed of India, Bangladesh, Pakistan and Sri Lanka.

The National General Secretaries conference was held on the final day at which there was very frank sharing of views and problems. The consultation was shared by Mr. Ricardo Torio of Phillipines. The theme presenttation was made by the various national Movements on two important aspects of the present context of YMCAs in Asia -

1. Urban Issues; Role and Responsibility of Local and National YMCAs.
2. YMCAs confronting Survival Crisis.

The National General Secretaries grappled with the problems facing the Asia Alliance and put up recommendations for action in the coming year.

The Asia Alliance was privileged to have the presence of the President of the World Allience of YMCAs Mr. Alejandro Vaissilaqui (Peru) and the Revd. Soo Min Lee (Korea), Secretary General of the World Alliance who actively Participated in the deliberation-.

The YMCAs will continue to carry out the Mission which is to extend His Kingdom among Young Men.

Alagan S. Kadirgamar
National General Secretary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

மலர் 150 06 - 04 - 1990 [ இதழ் 14


## செய்திகள்.

### புதிய மந்திரி சபை

ஆறு புதுமுகங்களுடன் கூடிய புதிய மந்திரி சபையை கடந்த 30 ந் திகதி இலங்கையின் ஜனாதிபதி R. பிரேமதாசா அவர்கள் உத்தியோக பூர்வமாக அறிவித்தார். மந்திரி சபையில் சில பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அனுபவம் வாய்ந்தவரும், முக்கிய அங்கத்துவருமான திரு காமினி .திசாநாயக்கா அவர்கள் தமது மந்திரி பதவியை இழந்துள்ளார். திரு. ரஞ்சன் விஜயரத்னா வெளிநாட்ட லுவல்கள் அமைச்சிலிருந்து பெருந்தோட்ட அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளார்.


### - அறிவித்தல் -

நன்றி செலுத்தும் ஆராதனை ஒழுங்கு, நல்லடக்க ஆராதனை ஒழுங்கு மற்றும் இதர அச்சிடும் வேலைகளும் எங்களால் அச்சிட்டு கொடுக்கப்படும்.

முகாமையாளர்
அ. இ. மி. அச்சகம்,
182.1ம். குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.


## நகர (ரக) வாழ்க்கை

காடி கொத்த இந்தக் கயவனை
நாடித் தேடி ஓடி வந்து
சாடித் தூக்கினீரே ஐயா உம்மை
பாடிப் பாடி நான் வருகையிலே
பேடியென என்னை பேயெனென
-இகழ்ந்து
கூடி ஆடி அவர் கூத்தாடி எனைப்
-பார்த்து
பீடி இப்ப விலை கூடி விட்டதடா!
கூடி நீ இப்போதேன் கும்மாளம்
-அடிப்பதில்லை

பின் குடி என்றார் கடி என்றார்
நகரத்து நண்பர்கள் விசுவாசப்படி
-ஏறி வந்த என்னை
அடி என்றார் பிடி என்றார் ஆக்
-கினைக்கு
அடங்கிவிட்டேன்.
நகரம் தான் நரகம் என்று அடி
மனசு துடிக்கையிலே
வடிவாக நடைபோட்டு படி ஏறிப்
போகின்றார் பக்தியுடன் என் அன்
-பின் நண்பர்.
படபடத்து நானும் அங்கே படி
-ஏறிப்
போய் பின் வாங்கில் உட்கார்ந்
-தேன்
கண் இரண்டும் மட மடக்க
படியடாபடி பாவமன்னிப்பை
-என்றார்
பாவமன்னிப்புப் பாடும் பழக்க
-தோஷமாம் அவர்க்கு

பாவத்திற்குள் இழுக்கும் அந்தப்
பரிதாபத்தின் குரல்களுக்காய்
படித்துப் படித்து நான் பல முறை
-பார்த்தாலும்
என் பட படப்பு நிற்க வில்லை —
பாவி என்னை
மறுபடியும் உம் ஜீவனுக்குள்
-உயிர்ப்பியும்.

S. ஜெயராஜ்
(நன்றி : விண்ணொளி)

## நாக்கின் நீளம் மூன்று அங்குலம்!

நாக்கின் நீளம் மூன்று அங்குலந்தான். ஆனால் ஆறடி உயரமுள்ள மனிதனைக் கொல்லும் சக்தி அதற்கு உண்டு!

லியனார்டோ டாவின்சின் என்ற அறிஞர் சொன்னார்: 'பேசுவதில் பேராற்றல் பெற்றவன் மனிதன்; ஆனால், அவனுடைய பேச்சில் அதிகப்பாகம் பயனற்றது; முறையற்றது' என்று.

'ஒரு மனிதன் சராசரி நாளொன்றுக்கு ஒரு மணிநேரம் பேசுகிறான். அதாவது வாழ்நாளில் 2.7 ஆண்டுகள் பேசியே காலந்தள்ளுகிறான்' என்று ஹங்கேரிய நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வாழ்நாள் முழுவதும் ஒருவர் பேச்சை பேசும் எழுத்தக்கினால் 400 பக்கங்கள் கொண்ட சுமார் ஆயிரம் புத்தகங்கள் வெளியிட முடியும் என்று கணக்கிட்டிருக்கிறனர்.

நாவை அடக்கியாளும் திறனைப் பற்றி எவ்வளவு அழகாக சாஅதி. என்ற பாரசீக அறிஞர் பகர்கிறர் 'நாவை அடக்கி ஆளத்தெரியாத ஒருவன் செய்யவேண்டியதெல்தாம் இதுதான். அவன் தன் நாக்கை அரிந்து எடுத்து வீட்டு, செவிடு, ஊமை என்று தன்னைத் தானே நினைத்துக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்து விட வேண்டும்.'

இந்தியாவில் புஜர் சமஹர் என்ற அறிஞரைப்பற்றிச் சிலர் சொல்லுவார்கள். எதைப்பற்றி முடிவு செய்வதாயிருந்தாலும் நிரம்பவும் தயங்குவார். தமக்குள் நீண்ட நேரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்த பிறகுதான் வாயைத்திறந்து பேசுவார்.

இதை அவரிடம் சொன்னபோது, 'நான் சொன்னதை நினைத்து வெட்கப்படுவதை விட நான் என்ன சொல்லவேண்டும் என்பதை நன்றாக முடிவு செய்து பின்னர் பேசுவது சிறந்தது அல்லாவ?' என்றார்.

'பேசுவது வெள்ளிக்குச் சமம். மௌனம் தங்கமாகும்' என்பது ஆங்கிலப் பழமொழி.'

பத்தொன்பாதம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐரிஷ் கவிஞர் சர் சாமுவேல் பெர்குசன் ஒரு சமயம் ஜெர்மன் தளபதி வான் மல்ட்கியின் மாளிகைக்கு விருந்து அருத்தச் சென்றார். தளபதி பன்மொழிப் புலவர். இந்த விருந்தைப்பற்றி கவிஞர், நண்பர் ஒருவருக்கு எழுதியக் கடிதத்தில் விருந்தின்போது தளபதி ஏழு மொழிகளில் மௌனம் சாதித்தார் என்று குறிப்பிட்டிருந்தார்!

## சிலுவைத் தியானம்

இயேசு தம் தாயை நோக்கி, ''அம்மா, இதோ! உம் மகன்'' என்றார். பின்பு சீடரை நோக்கி, ''இதோ! உன் தாய்'' என்றார்.
—(யோ. 19:26, 27).

மன்றாடித் தந்தையின் உறவை விழைந்த இயேசு, தொண்டாற்றிட தாயை விளிக்கிறார். 'அம்மா,- என் பாசத்துக்கும் நேசத்துக்கும் உரியவரே, என்னை ஈன்றெடுக்க 'ஆண்டவரே நான் உமக்கு அடிமை' எனக் கூறி உள்ளத்தைத் திறந்தவரே, கன்னி கருவுற்றாள் என்று களங்கம் கற்பிப்பர் எனச் சிறிதும் மனம் கலங்காத என் தாயே, என்னைப் பாதுகாத்திட, பதைக்கும் நெஞ்சத்தோடு எகிப்துக்கு ஏந்திச் சென்றவரே, நல்லுரை புகட்டி நன்மகனாய் என்னை வளர்த்திட்டவரே, நன்மை செய்யவும் இறைப்பண்பை வளர்த்திடவும் நாடெல்லாம் சுற்றியலைந்தபோது அக்கறை காட்டி அங்கெல்லாம் பின்வந்தவரே, இக்கட்டான இந்நிலையில் எதைத்தான் செய்யவியலும்?

''இச்சிலுவையிலே என்னை இறை அர்ப்பணமாகத் தருகிறேன்.'' (மாற். 7:11, 12) என்று கூறி பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வேனோ - இல்லையில்லை உம்மை ஆற்றுப்படுத்துவேன் என் நண்பனாம் நல்ல சீடனாம் யோவானிடம் உம்மை ஆற்றுப்படுத்துவேன். இந்நிலையிலுள்ள உலகின் மக்களுக்கெல்லாம் புதுக்குடும்பத்தை, புதுச்சபையை எழுப்புவேன். புது உறவைத் தருவேன். இவ்வுறவினால் ஒருவரையொருவர் ஆற்றுப்படுத்தட்டும் என்பது போன்று 'அம்மா, அதோ உன் மகன்' என்று கூறிகிறார்.

சீரான பண்பும் நேரான வாழ்வும் பெற்ற நன்மக்கள் பலர் நாசக்காரர்களால் அவ்வப்பொழுது நசுக்கப்படுவதைக் கண்டு கலங்கிடும் அன்னையருக்குப் பரிவுச் சொல்லாக - பாசச் சொல்லாக - பாதுகாப்பின் சொல்லாக இன்றும் இருந்து வருகிறதல்லவா? போரிலும், போராட்டத்திலும் மடியும் மகன் - அதனைக் கண்டு துயருறும் தாய், இச்சூழலிலே தான் சிலுவை நாதர் கூறுகிறார்: ''அம்மா, அதோ உன் மகன்'' சீடனை நோக்கி - 'அதோ உன் தாய்' என்கிறார்.

சிலுவையினடியில் நின்று, இயேசுவின் மொழியைக் கேட்டு, அதனைச் செயல்படுத்த முனைகையில் மன்னிப்பு, மீட்பு மட்டுமின்றி - புதிய உறவும் புதிய நெறியும உருவாகின்றன மரியம்மாளும் யோவானும் - தாய் மகனாய் வாழும் ஒரு புதிய உறவுக்குள் வருகின்றனர். இது ஒரு புதுக்குடும்பம் மட்டுமல்ல, உலகில் தோன்றிய முதல் திருச்சபை என்றும் கூறலாம். சிலுவைநாயகர் தம்மண்டை வருபவர்களைத் திருச்சபை எனும் மீட்கப்பட்ட குடும்பத்தில் சேர்த்து, தாமே தலையாகவுமிருக்கிறார். வாழ்வில் அவல நிலையைத் தோற்றுவிக்கின்ற இனம் - மொழி- நிதி நிலை வேறுபாடு என்ற பாகுபாடெல்லாம் இக்குடும்பத்தில் வந்தோர்க்கு இல்லை. ஒரே இல்லத்தைச் சேர்ந்தவர்களெனும் பரந்த உறவே ஏற்படுகின்றது

ஏழை எளியவர்க்கு, வறியோர் வாட்டமுற்றோர், உறைவிடமிழந்து புகலிடமற்று அலைந்து திரிவோர்க்கு இல்லங்கள் கட்டிக் கொடுக்கிறோம். இது வெறுங்கட்டிடமாக இருக்கப்படாது. இல்லத்தில் இருப்போரது உள்ளத்தில் அன்பும் அரவணைப்பும் மேலோங்கி நிற்க வேண்டும். மரியாள் ஆண்டவரின் பணிபுரிவதற்குத் தன்னையே ஈந்திட்ட அன்னை. தன்னுடைய மகன் தனக்கு மட்டுமல்ல உலகிற்குரியவர், உலகினை மீட்க வந்த இறைமைந்தன் என்பதை உணர்ந்திட்டாள்.

'உன் இதயத்தை ஒரு பட்டயம் ஊடுருவும்' என்று மரியாளுக்குச் சொல்லப்பட்டது நிறைவேறியதை அறிந்த யேசுபிரான் - அவ்வாறு ஊடுருவிய பட்டயத்தை உருவி எடுக்க - தம் சீடராம் யோவானுக்கு ஒரு பொறுப்பையளிக்க விரும்பினார். 'என் அன்னையைப் பராமரி என் அன்னையின் அன்பைப் பெற்றனுபவி' என்பது போல் இப்புது உறவை ஏற்படுத்தினார். மரியாளின் உறவும் அவரது பற்றுறுதியும் நன்னெறியும் யோவானுக்குத் துணை செய்தன.

ஆகவே, திருச்சபையே! மரியம்மாளைப் போன்று, ஆண்டவரே உமக்கு பணிபுரிய இதோ நானிருக்கிறேன்'' என்று உன்னையே ஒப்புவி. கல்வாரிமலை மட்டும் இயேசுபிரானைப் பின்பற்றிய, அன்பும் பண்பும் நிறைந்த யோவானே, நீ கடைப்பிடிக்கும் பொது வாழ்விலே, புது வாழ்வைக் காண்பாய். இக்கூட்டுறவிலே பொறுமையையும் பிறரது துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் பெருமையையும் பெறுவாய். - 'இதோ உன் தாய்' -

பண்பு பெற பிறரை உடன் பிறப்பாய்க் கொள்ள, புது வாழ்வையும் பொறுப்பையும் அளிக்கும் இயேசு அண்ணனிடம் வருக! இயேசுபிரான். அருகிலுள்ள திருச்சபையை நோக்கி - 'அம்மா, அதோ உன் மகன்', சபையினரை ஏறிட்டு நோக்கி 'அதோ உன் தாய்' என்கிறார்.

---

பேச்சுவன்மையைக் கற்றுத்தருமாறு மளமளவென்று பேசினான் ஓர் இளைஞன், சாக்ரடீசிடம். அதைக்கண்ட சாக்கரடீஸ் மற்றவர்களிடம் கேட்டதைவிட இரட்டிப்புக் கூலியை அவனிடம் கேட்டார். 'ஏன் என்னிடம் மாத்திரம் இரட்டிப்புக் கூலிகோட்கிறீர்கள்?' என்று கேட்டான் அந்த இளைஞன். 'நான் உனக்கு இரண்டு கலைகளைக் கற்றுத்தர வேண்டியுள்ளது, ஒன்று எவ்வாறு நாவை அடக்கவேண்டும் மற்றொன்று எவ்வாறு பேசுவது என்பது' என்றார்!

'பேசுவதற்குத் தாமதமாகவும் கேட்பதற்குத் துரிதமாகவும் இருங்கள்' என்று விவிலியம் விளம்புகிறது

'நாம் எல்லோரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம். ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷனும், தன் சரீர முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ள கூடியவனுமாயிருக்கிறான், என யாக்கோபு கூறுகிறார். இதனால் வாயைத் திறக்காது வாழ வேண்டும் என்பது திருமறைப் போதனையல்ல.

'அவனவனுக்கு இன்னின்னப்படி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் காரமேறினதாயுமிருப்பதாக' என்பது பவுல் அடியார் போதனை.

'ஆண்டவரே என் உதடுகளைத் திறந்தருளும், அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்' எனச் சங்கீதக்காரர் வேண்டுகிறார். கடவுளின் புகழைப் பாடிபரப்புவது தான் நாவு ஆற்றக்கூடிய அரிய. சேவை என்பது அவரின் கருத்து பொருத்தமான கருத்தும்கூட!

---

O ஜப்பானின் ஒபிகிரா பூங்காவில் உள்ள 400 மீற்றர் நீள வாங்கே உலகில் மிக நீளவாங்கு ஆகும். இதில் ஒரே சமயத்தில் 1000 பேர் அமரலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

**யாழ் ஆதின பெண்கள் ஐக்கியம்**

இந்திய கிறிஸ்த சேவ வித்தியாலயம் கிறிஸ்தவ கல்விக்கான 1 வருட டிப்ளோமா வகுப்புக்களை 1990ம் ஆண்டு ஜுன் மாதம் தொடக்கம் 1991 ஏப்பிரல் வரை சென்னை கிறிஸ்தவ பெண்கள் கல்லூரி வளாகத்தில் நடாத்த இருக்கிறார்கள். இதில் பங்குபற்றி உரிய பயிற்சி பெற நமது ஆதினம் இருவரை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. 21 வயதிற்கும் 40 வயதிற்குமுட்பட்ட பெண்கள் தங்கள் தகமைகளுடன் 15-.4.90 க்கு முன் விண்ணப்பிக்கவும். ஆங்கில அறிவு அவசியம்.

Dr. (திருமதி) C. அம்பலவாணர்
கிறீன் வைத்தியசாலை
மானிப்பாய்.

திருமதி . A. R. தம்பியப்பா
ஆர்க் லேன்
உடுவில், சுன்னாகம்.

## காகித ஓடம்

'என்னங்க ... இதை படிங்க...'

'அரும்பு' புத்தகத்தை கணவனிடம் நீட்டினாள் உஷா ... எடுத்து வாசித்தான் பிரசன்னா.

என் உயிர் நன்பனுக்கு

நீ எனக்கு மிகவும் உண்மையாக இருந்தாய். என் வருகையை எதிர்பார்த்து வாசலில் நின்றாய். நான் வெளியே செல்லும் போது தெரு முனை வரை வந்து வழியனுப்பி வைத்தாய்.

இருளில் என்க்கு முன்னால் நடந்தாய். இரவில் என் கால்மாட்டில் காவல் காத்தாய். இத்தனைக்கும் நான் உனக்குத் தந்தது சில எலும்புகளே.

என் முகம் மகிழ்ச்சியாயிருந்தால் நீ அங்குமிங்கும் துள்ளியோடினாய்.

துக்கமாயிருந்தால் துவண்டு போய் அமர்ந்து கண்ணீர் வடிந்தாய்.

—இதயகுமார்

ஹூம் ... துடங்கிவிட்டியா... உன் கதையை ...

'என்னங்க ... நாயை பற்றி எவ்வளவு உயர்வாக எழுதியிருக்கு பாருங்க ... அதை வளர்க்க ஒரு ஆசை ... அது தப்பா ...?'

'தப்பே இல்லாம்மா ...ஆனா நீ போடும் கண்டிசஷன்தான் பயமாயிருக்கு சாதா நாய் வேண்டாம்... உயர் ஜாதி நாய் வேணும் ... வம்ச வழி பேப்பரோடே ... அது தான் உதரல் ...'

'சாதா நாய் வேண்டாம் ... ஒரு நல்ல pedigun நாய் வாங்கலாம் ... அல்சேஷன் ...'

'உம் ... பேசாதே, அதுகட்டாது... அதுக்கு நீனி கொடுக்கிற பணத்திலே வீடே கட்டலாம் ...'

'சரி ... ஏதோ ஒண்ணு ... கீழ் ஜாதி நாய் வேண்டாம்...'

இந்த ஜாதிப் புத்தி மனிதனை விட்டுப் போகாதுப்பா ...ஜாதிகள் இல்லையடி பாட்பா ... என பாட ஆரம்பித்தான்,

'நான் மனித ஜாதியை சொல்லலை ... நாய் ரகங்கள் ... உயர்ந்த ரகம் என்றால் வித்தியாசம்தான்...'

'எதில் வித்தியாசம் .. ?'

'பார்ப்பதில் ... நடையில் ... எத்தனையோ இருக்கு ... ஒரு புத்தகத்தில் வாசித்தேன் ... Great Dane உருவத்தில் பெரியது ...Bull dog... பலனுக்கு பெயர்போனது ... டெரியர் (terriers) வீரத்துக்கு எடுத்துக்காட்டு ... பொமரேனியன் (Pomeranian), பூடில் (poodle) எல்லாம் அழகுக்கு ... ராஜஸ்தான் நாய் ... cocker spaniel '

'போதும்மா ... நீ அடுக்கினது ... இது கேட்டு கேட்டு ... சரி உன் ஆசைக்காக எது குறைந்த விலையில் கிடைக்குதோ அதை வாங்குகிறேன் ...ஆளை விடு ...'

நாட்கள் கடந்தன ...

உஷாவின் ஆசையும் நிறைவேறியது ...

அந்த நாயின் பெருமையைப் பேசிப் பேசி உஷாவிற்கு மாளவில்லை... அதைப்பற்றி ஒரு புத்தகமே எழுதும் அளவுக்கு தகவல்களை சகரித்தாள் ...அதற்கென்று ஒரு தனி இடம் ... சாப்பிட தட்டு ... பால் குடிக்க ஒரு குவளை ... தண்ணீருக்கு இன்னொன்று ... படுக்க இடம் ... அதில் அழகிய துணி ... நாய் பிஸ்கட் ... சோப்பு ... இப்படி வீடே அமர்க்களப் பட்டது ...

அன்று மாலை நேரம்

சூரியனின் வெண்மை தணிந்து விட்டது ... காற்று இதமாக வீசியது ...

### சிலுவைத் தியானம்

( 30-3-90 இதழின் தொடர்ச்சி )

எவ்வித அபாயத்தையோ ஆதாயத்தையோ பொருட்படுத்தாது இயேசுவின் வழியில் நடத்தல். ஆகவே, ஒருவன் சரியான வழியில் நடக்கும்போது இது அவன் கண்ட வெற்றியல்ல, அவன் தன்னைக் கட்டுப்படுத்தி, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் வாழ்க்கையே.

**செபம்:**

இறைவா, நான் சரியான வழியைக் கண்டு பிடிக்கவும், என்ன தடை வந்தாலும், அதனையே பற்றிக் கொள்ள உதவியருளும் நெருக்கடிகள் மத்தியில், உமது பிரசன்னத்தை உண்மையாக அறியும் அறிவைத்தாரும். இயேசு கிறிஸ்துவின் மூலம் வேண்டுகிறேன்.

—ஆமென்

உஷாவும் அவள் தோழி ஷோபாவும் பேசிக்கொண்டிருந்தனர்.

'உங்க நாய் ரொம்ப அழகா இருக்கு உஷா ... எங்கிருந்து

'இது pedigun நாய் ... cross அல்ல ... ரொம்ப விலை ... அவர் இராமன் friend இடம் இருந்து வாங்கி வந்தர் ... அவர் உயர் ரக நாய்களை விருந்தி செய்து விற்கிறார் ... அதுக்கு அமுல் டின்பால் தான் கொடுக்கணும் ... கண்ட பொருளும் கொடுக்கக்கூடாது...'

'உயர்ந்த ரகம் இல்லையா? ... அதுதான் பார்க்கவும் 'ஒஸத்யா' இருக்கு ...'

டோனின்னு பேர் ...'

காதை உயர்த்திக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தது டோனி... தன்னைப பற்றித்தான் பேசுகிறார்கள் என்று நன்றகேவே தெரியும்! கொஞ்சம் நாட்களாக இதைக் கேட்டு 'கொம்பே' முளைத்து விட்டது ...

டோனி வாலை ஆட்டிக் கொண் அருகே வந்தது. உஷா தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள் ... தடவிக் கொடுத்தாள் ..

டோனி புராணம் தொடர்ந்நது ..

'எனக்கு இப்படி வளர்க்க ஆசை ... ஆனா அவருக்கு இதெல்லாம் பிடிக்காது ...'

'நான் ஒரு பூனைகூட வைத்திருக்கேன் ... அதுக்கு டாமின்னு பேர் ... அது சாதா பூனை ரொம்ப நல்லது ... டோனியும் டாமியும் சண்டையே போடாது ... டோனி ஒரு மாதிரி செய்தாலும், டாமி ஓடிவிடும் ...'

பேச்சு பல கோணங்களைத் தொட்டது ... வந்தவள் எழுந்தாள்

'பேய்விட்டு வர்ரோன் உஷா...'

'சரி ... ஷோபா ...'

## பழைய ஏற்பாட்டு ஆகம வரிசை

( 5ம் பக்கத் தொடர்ச்சி )

5. வரும்பின் ஆகூபக் செப்பனியா
-ஆகாய்
வல்ல சசரியா மல்கியாவும்
திருமுறை யாமுப்பத் தொன்ப
தென்றாகமம்
தேனமு தாம்பழம் ஏற்பாட்
-டிலே.

குறிப்பு:
(a.சாமுவேல் 1,2 ராஜாக்கள் 1,2; நாளகமம் 1,2.
b எதிரதுரைப்போர் - தீர்க்கதரிசிகள்.)

டோனி கீழே இறங்கியது ...

ஷோபா வெளியே செல்லும் போது தெரியமல் டோனியின் நுனி வாலை மிதித்துவிட்டாள் ... அது அவளுக்கே தெரியது ...

டோனிக்கு கோபம் தலைக்கு ஏறியது ...

'வள்' என்ற சத்தத்துடன் அவள் காலை கவ்வ வந்தது ... தவறி புடவை கரையை கவ்வி விட்டது ...

அது கிழிந்தது ...

உஷா 'டோனி .. டோனி' என்று கத்தினாள் ...

ஷோபா சீறினால் ... 'என்ன நாய் இது? தரத்திற்கு தகுந்த நடக்கை இல்லையே ... என்னுடைய அழகான புடவையை கிழித்து விட்டதே ...! போன மாதம்தான் 'விமல்' ஷோரூமில் வாங்கினேன் ... pedigun நாய் என்று பெருமைப் படக்கூடிய அளவுக்கு ஒன்றுமில்லை .. எல்லாம் வெறும் 'ஷோ' தான்'

படபடவென பொழிந்தாள். ஒருவாறு அவளை சமாதானப்படுத்தி அனுப்பினால் உஷா. அவள் சென்றதும் —

'டோனி' ... டோனி ... வா இங்கே ... இப்படியா விருந்தளியிடம் நடப்பது ... மூளையிருக்கா உனக்கு ... இரு ... இரு ... கம்பு எங்கே ... ரெண்டு கொடுத்தாத்தான் தெரியும்' — கம்பை எடுத்து அடித்தாள்.

'இனி இப்படி செய்யதே ... எனக்கு அவமானமாப் போச்சு' சங்கிலியை எடுத்து டோனியை கட்டிப்போட்டாள் ...

பிரசன்னா ஆபீஸ் முடிந்து வந்தான் ...

'டோனி ... டோனி ... ஓ... கட்டிப் போட்டிருக்க ...' சங்கிலியை அவிழ்த்து விட்டான் ... தடவினான்

'போதும் உங்கள் கொஞ்சலும் கெஞ்சலும் ... இன்றைக்கு அது செய்த ஆநியாயத்தைக் கேளுங்கள் ...'

சொல்லத்துடங்கினாள் உஷா ... உள்ள எழுச்சியில் அவளுக்கு தொண்டை அடைத்தது ...

( மிகுதி அடுத்த இதழில் )

## மறைக்கப்பட்ட இரு சொற்கள்

ஒரு கிராமத்திலுள்ள தேவாலயத்தின் கட்டிடத்தின் வாசலின் முன் ஒரு ஸ்தம்பத்தில் பொருத்தப்பட்டிருந்த நாமப் பலகையில் பின்வரும் வாக்கியம் துலாம்பரமாக பொறிக்கப்பட்டிருந்தது:

'அறையப்பட்ட
கிறிஸ்துவையே
போதிக்கிறோம்'

பல வருடங்களாக அந்த தேவாலயத்தில் கிறிஸ்துவின் வல்லமையால் நிரப்பப்பட்ட அனேக ஊழியர்கள் நாமப் பலகையில் எழுதப்பட்டிருந்த கருத்துக்கிணங்க அறையப்பட்ட கிறிஸ்துவே இரட்சிப்புக்கு ஒரே ஒரு வழி என்று போதித்து வந்தார்கள். இதன் பேறாக அனேக மக்கள் குணப்பட்டு கிறிஸ்துவையே தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். சபையும் வளர்ச்சி அடைந்து வந்தது நாளடைவில் இத்தகைய வல்லமை வாய்ந்த ஊழியர்களின் சந்ததி மறைய ஒரு புதிய சந்ததி தோன்றியது. இப்புதிய ஊழியர்கள் சிலுவைக்குக் கொடுத்த மத்திய ஸ்தானத்தைக் கொடுக்காது கிறிஸ்துவின் போதனைகளை மாத்திரம் விளக்கி உரைகள் ஆற்றினார்கள். இதன் பேறாக சபையின் சாட்சி பகரும் வலிமை குறைந்தது. சபையின் நிலை இவ்வாறிருக்க ஆலயத்தின் நாமப் பலகையின் ஸ்தம்பத்தில் படர்ந்து கொண்டிருந்த ஒரு செடியின் கிளை பலகையில் எழுதியிருந்த முதலாம் சொல்லை மறைத்தது அப்பொழுது மக்கள் காணக்கூடிய வாக்கியமானது:

"கிறிஸ்துவையே
போதிக்கிறோம்"

என்ன விந்தை! அந்த ஆலயத்தின் சபையில் நடந்ததை இயற்கையே பிரதிபலித்துக் காட்டியது.

காலாகதியில் இன்னுமோர் புதிய சந்ததி தோன்ற ஆரம்பித்தது. ஆலயத்தில் படிப்படியாக கிறிஸ்துவின் போதனைகளுக்கும் திருமறைக்கும் கொடுக்கப்பட்டு வந்த முக்கிய இடம் வேறு விடயங்களால் எடுக்கப்பட்டது. சமுதாய சுவிசேஷம் (Social Gospel) அரசியல் (Politics) ஆதிய துறைகளிலிருந்து எடுக்கப்பட்ட விடயங்களே இப்பொழுது பிரதம இடத்தைப் பெற்றன. இதற்கிணங்க இயற்கையும் தன் வேலையைச் செய்து கொண்டே இருந்தது. நாமப் பலகையின் மேல் படர்ந்து கொண்டிருந்த செடி "கிறிஸ்துவையே" என்ற சொல்லை மறைத்து விட்டது. நாமப் பலகை பின்வருமாறு தோன்றியது.

முன் போன்று சபையின் ஆத்மீக வளர்ச்சியில் தோன்றிய மாற்றத்தையே இயற்கையும் பிரதிபலித்துக் காட்டியது. இந்த மாற்றத்தின் பேறாக அத்தேவாலயத்தின் ஆராதனைகளில் பங்கு பற்றி வந்த விசுவாசிகளின் எண்ணிக்கை குறைந்தது.

இது எமது திருச்சபைகளுக்கு ஒரு எச்சரிக்கையாய் இருக்கட்டும்- சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காய் நாம் அனேக விதமான தொண்டுகளில் சபைகளாகவும் தனி ஆட்களாகவும் ஈடுபட்டு வருகிறோம்.

சமுதாய சுவிசேஷத்தை பரப்புவது எமது கடமையே, எனினும் அத்தொண்டுகளின் மத்தியில் நாம் சிலுவையின் மத்திய ஸ்தானத்தை மறந்து விடக்கூடாது. - ( வளரும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாரகை ஒளி:

திரள்செல்வத் தில்நற் கீர்த்தியே சிறப்பு;
பொன்வெள்ளி தனிலும் தயையே நன்று.

— நீதிமொழிகள்- 22: 1

# எங்கள் கருத்து

## இயேசுவின் மரணம்.

'லெந்து' என்னும் சிலுவைத் தியான நாட்களின் இறுதி வாரத்தை அடைந்துள்ளோம். ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற நல்ல மேய்ப்பனாக நம்மிடம் வந்த இயேசு பெருமானின் மரணத்தைப் பற்றித் தியானிக்கும் புனித வாரத்திற்குள் புகுந்துள்ளோம். நம்மைப் பாவப் பிடியிலிருந்து மீட்க, நமக்காக மரித்த எம்பெருமானின் மரணத்தின் மகத்துவத்தைப் பற்றித் தியானிப்போம்.

இயேசுவின் மரணம் ஒரு தனிமையான சம்பவம் அன்று. பிறரும் தொடர்ந்து அதில் பங்கு பெற வேண்டுமென்பதே ஆண்டவரின் விருப்பம். உலகின் உய்விற்கும் புதிய வாழ்விற்கும் அவரது மரணம் ஒரு மார்க்கமாய், கருவியாய், சாதனமாயிருக்கிறபடியால், அவரை விசுவாசிக்கிற. அனைவரும் தத்தம் சிலுவைகளை எடுத்துக் கொண்டு தம்மைப் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். அவரது இரட்சணிய வேதனையில் அடியார் பங்குபெற வேண்டுமென்பதே இயேசுவின் சித்தம்.

இயேசுபெருமான் நம்மனைவரையும் நேசித்தார். பாவிகளையும் நேசித்து அவர்களோடு அவர் ஒன்றுபட்டிருந்தார். அவர்கள் பணியில் தம்மைச் செலவிட்டார். ஊமையர், குருடர், சப்பாணிகள், குஷ்டரோகிகள் முதலிய பிணியாளிகளைக் குணமாக்குவதில் தமது அன்பை ஊற்றினார். தனியாட்களோடு, சிறப்பாகத் தமது சீடரோடு பழகினபோது, தனியொருவர் மீதும் அன்புகூர்ந்தார். அவர்கள் பண்பை அறிந்தார். அவர்களது பாவங்களையும் தயவாய் மன்னித்தார்.

வீட்டின் மேற்கூரையிலிருந்து அவரது திருப்பாதங்களண்டை இறக்கிய திமிர்வாதக் காரனுக்கும், சீமோன் செய்த விருந்தின்போது, அவன் வீட்டிற்குள் வந்து, அவரைப் பணிந்து கொண்ட பாவியான பெண்ணிற்கும், மற்றும் பலருக்கும் – ''உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன'' என்றருள் புரிந்தார். அவர் மக்களுடைய உடற்பிணிகளுக்கும் உள்ளப் புண்களுக்கும் மருந்தானார். தாம் சுயாதீனராயிருந்தது போலவே, மக்களும் பாவவிடுதலை பெற்று இறைவனுடைய பிள்ளைகளாகுமாறு உதவினார்.

எம்பெருமான், தமது போதனையிலும், தமது சாதனையிலும். தமது குணமாக்கும் பணியிலும் தமது முழு வாழ்க்கையிலும், பாவிகளான மக்களுக்கு இயேசு கடவுளின் அன்பை ஊற்றினார். இறைவன் கிறிஸ்துவுக்குள் உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கினார் (2கொ. 5:19). இவ்வகையில் இயேசுவின் மரணம். அவரது வாழ்க்கையின் தொடர்ச்சியும் உச்சியுமாகும். தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார். (யோ. 13:1) பாவிகளான மக்களோடு அவர் தம்மை ஒன்றாக்கியது, கல்வாரியில் இரு பாவிகளின் நடுவில் பாவியாக மரித்ததில் முடிந்தது. அவரது வாழ்வு போலவே அவரது சாவும் கடவுளின் அன்பை வெளிப்படுத்திற்று.

''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, கடவுள் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணினார்' -(ரோ. 5:8).

எனவே, கடவுளின் அன்பு வெளிப்பாடே இயேசுவின் மரணம்.

''இந்த விந்தை அன்புக் கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்;
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன்''.



## சிலுவை நாயகனைப் பாரீர்!

இறை மைந்தன் இயேசு புவி வந்தபோது
தரைமீது படுத்திடப் படுக்கையோ இரவல்
மறைபுகழும் எருசலைப் பவனி வந்த போது
கறைபாட கழுதைவாகனமோ இரவல் - ஆனால்
அறையுண்ட சிலுவையும், அணிந்திட்ட முடியும்
இறைமைந்தன் உடைமையே!

பசியற்ற கூட்டம் களைத்திட்ட போது
முசிப்பாற்ற ஈந்த அப்பமோ இரவல்
ருசித்திடும் வண்ணம் பகிர்ந்திட்ட போது
புசித்திட்ட மீன் துண்டமும் இரவல் – ஆனால்
அறையுண்ட சிலுவையும், அணிந்திட்ட முடியும்
இறைமைந்தன் உடைமையே!

நெருங்கிய கூட்டம் வந்துற்ற போது
அருங்கருத்தாற்றிய படகோ இரவல்
கருங்கற் கூட்டமோ தனக்கில்லாத போது
பெருங்களைப் பாற்றிய குடிலதுவும் இரவல் - ஆனால்
அறையுண்ட சிலுவையும், அணிந்திட்ட முடியும்
இறைமைந்தன் உடைமையே!

இரவலோ இரவல் விருந்துண்ணும் மாடம்
இரவலோ இரவல் பஸ்காவின் ஆடு
இரவலோ இரவல் உடல் சுற்றிய துணி
இரவலோ இரவல் உடல் புதைத்த குழி - ஆனால்
அறையுண்ட சிலுவையும், அணிந்திட்ட முடியும்
இறைமைந்தன் உடைமையே!

'பாவம் போக்கும் பரமனைப் பாரீர், அவர் பதம் பணிவீர்
பிறர் நலம் கருதிப் பணிபுரிய வாரீர்!'

## முதலில் எது?

பல போர்க்களங்களில் வென்றவன் பராசரன் என்ற மன்னன். அவன் தொட்டதெல்லாம் பொன்னாயிற்று; கொடுத்ததெல்லாம் பலன் கொடுத்தது; அவன் வெற்றி பெறாத துறையில்லை; அவனை வணங்காத தலையில்லை.

ஆனால் அவன் மனமும் பல முறை சஞ்சலத்துக்குட்பட்டது. 'எனக்கு மனக்குறை இருக்கிறதோ என்றவன் நொந்து கொண்டான், அமைதியில்லாமல் அங்குமிங்கும் அலைந்தான்.

''ஊரை வென்றேன்' உலகை வென்றேன்; மன்னர் பலரை அடிபணியச் செய்தேன்; நினைத்ததையெல்லாம் நடக்க வைத்தேன்; இனந்தெரியாத கவலை என்னையும் ஆட்கொண்டு விட்டதே, ஏன் ஏன்?'' என்று கதறினான்.

தூரத்தே இருந்து ஒரு குரல் கேட்டது; ''எல்லாவற்றையும் நீ வென்றாய்; ஆனால் முதலில் வெல்ல வேண்டிய ஒன்றை நீ வெல்லவில்லை.'' — ''நானா? நான் வெல்லவில்லையா? என்னால் வெற்றி கொள்ளப்படாதது என்ன இருக்கிறது?''

அந்தக் குரல் அமைதியாகப் பதிலளித்தது; ''நீ உன்னை வெல்லவில்லை; தன்னை வெல்லாதவன் உலகை வென்றாலும் அமைதி தழைப்பதில்லை!'' — ''என்னை வெல்வது எப்படி?''

''நல்ல கேள்வி! உலகை வெல்ல உனக்கே புத்தியிருக்கிறது. உன்னை நீயே வெல்லப் பிறர் புத்திதேவைப் படுகிறது! கவனமாகக் கேள். — வெற்றியால் பெற்ற அலங்காரங்களைக் களைந்து விட்டு, நீ, நீயாக மாறிவிடு! அப்படி மாறிவிட்டாயானால், நீ உன்னை வென்று விட்டதாகப் பொருள்!''

பராசரன் வெகுவாக முயன்று பார்த்தான். அலங்காரங்களைத் துறந்து விட்டுத் தன்னை வெல்வதற்கு அவன் பெரு முயற்சி எடுத்துக் கொண்டான், அந்த முயற்சியில் அவன் வெல்லவில்லை; சாவு அவனை வென்று விட்டது.

-கவிஞர் கண்ணதாசன்.

## பழைய ஏற்பாட்டு ஆகம வரிசை

-டாக்டர் வீ. ப. கா. சுந்தரம்,
MA, Ph. D.

திருமறையில் முதல் 5 ஆகமங்கள் இஸ்ரவேலரின் மீட்பு வரலாற்றைக் கூறுவன. அடுத்தது, யோசுவா முதல் எஸ்தர்வரை முந்திய தீர்க்கதரிசனம், வரலாறு, அமைப்பு முறை ஆகியவற்றைத் தெரிவிப்பன. யோபு சங்கீதம் முதலியன செய்யுள் நலம் கனிந்தன. ஏசாயா முதல் பிறவற்றைப் பிந்திய தீர்க்கதரிசன நூல்கள் எனலாம். கீழ் வரும் ஆகமவரிசைப் பாடல் அந்தாதியாக அமைக்கப்பட்டது. அஃதாவது, ஒரு சரணத்தில் அந்தம் (கடைசியாக வரும் எழுத்தோ சொல்லோ அசையோ) அடுத்த சரணத்தின் ஆதியாக (முதலாக) வருவது. இந்தப்பாடல் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற ஒலியுருவினது.

1. ஆதியென் ஆகமம் யாத்திரை
-லேவியர்
ஆயவெண் ணாகமம் உபா
-கமம்
ஓதிய ஐந்துமே நீஒங்கிஸ்ரவே
-லரின்
ஒல்லும்மீட் பைச்சொலும்
-யோசனையாய்.

2. யோசுவா நீதியர் ஒப்பிலா
-ரூத்து
a ஒன்றிரு சாமுவேல் மன்னா
-நாளே
நேசமாம் எஸ்ராநெ கேமியா
-எஸ்தரும்
நீளிஸ்ர வேல்வர லாற்றுச்
-செய்தி

3. செய்யுளின் இன்பம்செறிந்துக
-னிந்தன
சேர்யோபு சங்கீதம் நீதி
-மொழி
உய்யும்பி ரசங்கி உன்னதப்
-பாடல்கள்
ஓங்குமேல் b எதிரது ரைப்
-போரே

4. ஏசாயா எரேமியா ஏங்கிப்
-புலம்பலும்
எசேக்கியேல் தானியேல் என்
-றிவையும்
ஓசியா யோவேலும் ஆமோஸ்ஒ
-பதியா
யோனாவும் மீகாவும் நாகூம்
-வரும்

(மிகுதி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# When Good Men Do Nothing

"And those who went ahead and the others who came behind shouted, Hosanna! Blessed is he who comes in the name of the Lord" (Mk. 11:9)

Pilate spoke to them again "Then what shall I do with the man you call king of the Jews?" They shouted back. "Crucify him" (Mk. 15:12-13)

What happened? For there on the Sunday morning was Christ being escorted up the road to the City with shouts of welcome. Whole families were travelling together and the atmosphere had about it something of a picnic with sudden delight recognizing Jesus, they began to call out greetings. Then a spark caught fire and they were shouting & singing "Hail Jesus! "Hosanna" to the son of David"

What it a "Hosanna"? The Hebrew equivalent YASA to the Greek word "Hosanna" literally means "Save usplease" By Jesus' day Hosanna had become a fairly common expression of exuberance used at certain festivals and feast, without reference to its salvific meaning. What did this throng sourounding Jesus have in mind? Were their shouts of "hosanna" plea for salvation or merely enthusiastic whoops? A multitude had followed him from Jericho after he gave sight to Bartimaeus. No doubt as he mounted the colt, one person's insight became a frenzied crowd's chant.

At best what they could have hoped for was David's Kingdom re-established - Victory over all their foes, prosperity, freedom being conquerors instead of the conquered. But the ultimate answer for their "hosannas" if we would see Mark 11:11 that is almost the epitome of anticlimax. In the midst of the good & faithful people's shouts, Jesus patiently pauses to look around. recognising that the timing is not correct and knowing the depth of this sincerity he gathers up his faithful twelve and retires once again to Bethany

When we place ourselves among those shouters we could see how they changed their minds and loyalty to Jesus Christ and keeping quiet watching all what happens to Jesus on that horried Friday. The same people in the same city were bawling out "Crucify him, String him up". How could it happen in so short a space of time? Were they traitors, these people, whom somebody had bribed to change sides? No it wasn't that.

Had they been persuaded then, between Sunday and Friday, to switch their allegiance? Had some body, reasoning with them, argued them into believing that Jesus was opposing God's will and proving a danger to their Community?

Again, there is no evidence of any such swing of opinion. Certainly there had been debates going on that week. Christ had thrown the money-changers out of the temple and was involved in more than one hotly-contested argument. But there is no evidence to prove that he had lost the sympathy of the people. These were folks who had followed and listened to Jesus Christ inspite of warnings from the authorities. Among them were some who would become the backbone of his Church and demonstrate in a few years time how staunch they could be.

It was just at this point that they inexplicably failed. For some reason they were not there when they were badly needed. And that of course is the answer. It was not bribery, brainwashing or indifference but on the Friday morning they simply were not there. That hostile mob was a different crowd altogether. These decent kindly people who had shouted "Hosanna" were not present in any numbers that counted.

With some, no doubt, it was because they were busy. They had other things to do. Many were busy in preparations to make for the passover meal that evening, etc. etc. So there was not a moment to spare.

A few had possibly been thinking things over and become a little disillusioned about the whole business. They respected Jesus and what he stood for. On the other hand, the authorities also had a number of sound arguments and ardent supporters on their side. So when the call was relayed, "come quickly. It is urgent" these rather disillusioned supporters decided to sit on the fence. "I'll think about it, you'll have to persuade me first that it is really necessary.

And some, no doubt the majority did not want to get involved. They had not minded Palm Sunday, where they all went on procession with Palm leaves and wanted to make him a king over them and in fact they had enjoyed it thoroughly. That was religion as it ought to be-a joyful family affair. But come to the praetorium now? Get mixed up with that ugly, horrified mob? No where would you find more loyal adherents. But they drew the line at getting involved in anything unpleasant.

That is how it happened and how evil things, usually do hapen not because the evil doers are stronger or more numerous but because the good people are not there or even if they are there they keep silent.

"All that is necessary for the truimph of evil" said Edmund Burke "is that good men do nothing". We have seen some of the reasons for it and they still obtain in our society too. When there is injustice coming from any corner we christians have to stand aside and voice our opinion against it. May be we are numerically small but it is our masters steps that we should follow. Even today we see injustices all around and we also tend to be like the people who did nothing on that Friday when Christ, was crucified.

It is not enough for a Christian that his / her heart should be in the right place. Christ our Lord went to the cross because of people whose hearts may have been right but their hands were slack, their voices mute and their feet rooted to the ground. All that is needed today to break barriers, to bring down the injustices practiced in our society is for the Christians be it a minority to stand against anything which disturbs there normal life and welfare of the people at large and to work for a better society. Our singing of "Hosanna in the highest" etc, etc all these should not be stopped only with the Palm Sunday but we have to continue to Confess this through out the week and in fact through out our life in particular.

To day the challenge is given to the church to take sides with the poor, oppressed and downtrodden but if we, like the people of Jesus' time keep quiet we are crucifying our Lord.

May the good Lord give us courage and strength to continue as christians and to do justice so that we may really become the followers of Christ. Amen.

C.T.R.

Registered as a Nws paper at the P. O. Sri Lanka under No. Q/J/104/89 New. Printed for the Jaffna Diocese of the Church of South India at America Ceylon Mission Press. 182, 1st, Cross Street, Jaffna on Friday, 23 April 1990 and published by The Rev. G.D.ANANDARAJAN, 182, First Cross Street, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org